DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.9

Name : முத்தையா
Father/ Husband Name : சொர்ணமணி
Village :
Taluk :
Calling :
Age :

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 22.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் பணங்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. அரசி என்பவர் இரயில்வே ஸ்டேசனில் இருந்து இறங்கி வரும் போது நகையை அறுத்து எடுத்து சென்றுவிட்டார்கள். அது சம்பந்தமாக புலன் விசாரணையில் திருவேம்பத்தூர் காவல் நிலைய போலீசார் எதிரிகளை பிடித்து வைத்திருப்பதாக சொல்லி காவல் நிலையம் வர சொன்னார்கள். மேற்படி நகையை மீட்டுவிட்டோம் அடையாளப் படுத்துவதற்காக காரைக்குடி நீதிமன்றத்திற்கு வர சொன்னார்கள். அங்கு கையெழுத்து செய்தேன். 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி 2வது எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி 3வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அத்தாட்சி மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி அத்தாட்சி மகஜரில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி கையெழுத்துகள் அனைத்தையும் காரைக்குடி நீதிமன்றத்தில் வைத்து தான்

போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 20.02.2018ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய வட்ட ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 08.02.2018ம் தேதி வாகன தணிக்கையின் போது 2வது எதிரி சரவணனை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வதாக கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் தொடர்சியாக 3வது எதிரி காளீஸ்வரனை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் 2வதாக கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் தொடர்சியாக 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் முத்துக்குமார் என்பவரின் நகைக் கடையில் கைப்பற்றப்பட்ட சுமார் 4 பவுண் எடையுள்ள தங்க செயினை அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றியதற்கு சாட்சியாக இருந்து 2வதாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)**

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.95/2018**

Deposition of witness for Prosecution அ.சா.10

Name : சேசு
Father/ Husband Name : அந்தோணி
Village :
Taluk :
Calling :
Age :

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 22.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் இருமதியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். ஆஜர் 1ம் எதிரியை தெரியாது. நான் கையெழுத்து போட்டதாக எனக்கு நினைவு இல்லை. 1வது எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 17.02.2018ம் தேதி 12.00 மணிக்கு வாகன தணிக்கையின் போது 1வது எதிரியை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வதாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.